பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(22.02.2025 முதல் 26.02.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.comதொ. நகல்(அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 015 (02) PJN/GKMS/2025 தேதி: 21.02.2025

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (16.02.2025 முதல் 20.02.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -26.02.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/02 | 17/02 | 18/02 | 19/02 | 20/02 | | நாள்-1 22/02 | நாள்-2 23/02 | நாள்-3 24/02 | நாள்-4 25/02 | நாள்-5 26/02 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 32 | 32 | 32 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 30 | 30 | 30 | 30 | 30 |
| 21 | 21 | 20 | 20 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 4 | 1 | 3 | 2 | 1 | மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| 69-96 | 68-94 | 66-94 | 67-96 | 68-92 | ஈரப்பதம் (%) | 80-84 | 80-84 | 80-84 | 84-86 | 84-86 |
| 2 | 3 | 2 | 2 | 3 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 12 | 12 | 12 | 14 |
| வடக்கு வட கிழக்கு | வட மேற்கு | வட மேற்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு |

### எதிர்பார்க்கப்படும் வானிலை (22.02.2025 முதல் 26.02.2025 வரை):

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையாகக் காணப்படும். வெப்பநிலை 23-30 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-86 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-14 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

பிப்ரவரி 26 லிருந்து மார்ச் 04 வரை மழை (1.6 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (32.0 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (21.6 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| எள் | விதைத்தல் | நெல் தரிசு எள் VRI (SV) 1 ஐ ஹெக்டேருக்கு 5 கிலோ என்ற அளவில் பிப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை விதைக்கலாம். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா அல்லது 2 கிராம் கார்பன்டாசிம் கொண்டு விதை நேர்த்தி செய்யவும். |
| பருத்தி | விதைத்தல் | நெல் தரிசு நார் பயிரான பருத்தி MCU 7 அல்லது SVPR 3 போன்ற ரகங்களின் பஞ்சு நீக்கிய விதைகளை ஹெக்டேருக்கு 7.5 கிலோ என்ற அளவில் விதைக்கவும். |
| நெல் | அறுவடை | நெல் அறுவடை செய்தபின் நெல்லை 14-16 சதவிகித ஈரப்பதத்தில் சேமித்து வைக்கவும். |

| | | |
|---|---|---|
| ஆடு | அம்மை நோய் | வெயில் காலத்தில் ஆடுகளுக்கு அம்மை நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே ஆடு வளர்ப்போர் தங்கள் ஆடுகளுக்கு அம்மை நோய் வரமால் தடுக்க வெயில் காலத்திற்கு முன்பாகவே அம்மை தடுப்பூசி போட வேண்டும். |
| கால் நடை | உண்ணி காய்ச்சல் | → கால்நடைகளில், ஒட்டுண்ணியால் உண்ணி காய்ச்சல் நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.<br>→ இந்நோயானது புற ஒட்டுண்ணிகள் கறவை மாடுகளின் ரத்தத்தை உறிஞ்சும்போது, மாடுகளுக்கு உண்ணி காய்ச்சல் உண்டாகும். நோய் தாக்கப்பட்ட கறவை மாடுகளின் கண் இமைகளின் சவ்வு மற்றும் இனப்பெருக்க உறுப்பின் சவ்வு போன்றவை வெளிர்நிறத்தில் காணப்படும்.<br>→ சிவப்பு நிறத்தில் சிறுநீர் கழிக்கும்; ரத்தசோகை, மஞ்சள் காமாலை போன்ற அறிகுறிகள் ஏற்படும். இவற்றை கவனிக்காமல் விட்டு விட்டால் சில நாட்களுக்கு பிறகு, மூச்சுத்திணறல் ஏற்பட்டு, மாடுகள் இறக்க நேரிடும்.<br>→ இந்நோயை கட்டுப்படுத்த, கால்நடை மருத்துவரை உடனடியாக அணுகவும்.<br>→ கொட்டகையை சுத்தமாக பராமரித்தாலே, உண்ணிக்காய்ச்சல் நோயை தவிர்க்கலாம்.<br>→ இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். கால்நடைக் கொட்டகைக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் இம்மருந்தினை தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** நெல் தரிசு எள்ளை மார்ச் 15 வரை விதைக்கலாம்.

**முதல்வர்**